என்னை ஆதரியும்

Uphold Me

Album 27 Song 3

என்னை ஆதரியும்

Sat
DATE 05 | 05 | 2007 — 109 சங்கீதம்

என்னை ஆதரியும்
உமது நாமத்தினால்
என்னை விடுவித்திடும்
உமது கிருபையினால்

என்னை ஆதரியும் என்னை விடுவித்திடும்
உமது நாமத்தினால் உமது கிருபையினால்

நான் சிறுமையும் எளிமையும் ஆனவன்
என் இருதயம் எனக்குள் குத்துண்டிருக்கிறது
சாயும் நிழலைப்போல் அகன்று போனேன்
வெட்டுக்கிளியைப் போல் பறக்கடிக்கப்படுகிறேன்
(என்னை)

உபவாசத்தினால் என் முழங்கால்கள் தளர்ச்சியடைந்தது
என் மாம்சம் புஷ்டியற்று உலர்ந்து போகிறது
துன்மார்க்கருக்கு நான் நிந்தையானேன்
அவர்கள் என்னைப்பார்த்து தங்கள் தலையைத் துலுக்குகின்றார்
(என்னை)

எனக்கு சகாயம் பண்ணும்
உமது கரத்தினால்
என்னை இரட்சியும்
உமது கிருபையினால்

எனக்கு சகாயம் பண்ணும் என்னை இரட்சியும்
உமது கரத்தினால் உமது கிருபையினால்

துன்மார்க்கர் சபித்தாலும் என்னை நீர் ஆசீர்வதியும்
அவர்கள் எழும்பினாலும் வெட்கப்பட்டுப் போகட்டும்
உமது அடியான் மகிழ்ச்சியாய் இருக்கட்டும்

DATE
יהוה
I AM
HALLELUJAH
HALLELUJAH
A Ω
Ω